**தெஹிஓவிட்ட பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 22 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 29 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 19 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் தெஹிஓவிட்ட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகளிற்குரிய நீதிமன்றத் தண்டப்பண வருமானத்திற்கான நிர்வாக செலவின கூட்டுத் தொகை ரூபா 139,502 கணக்கீடு செய்யப்படாததால் கடன்கொடுனர் அப்பெறுமானத்தால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய செலவுகள் மற்றும் பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது ஜர்னல் குறிப்பினூடாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் உபயோகப் பதிவேடு பிரகார மீதிகளிற்கிடையில் கூட்டுத் தொகை ரூபா 14,942,323 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் அதனுடன் தொடர்புடைய உபயோக பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் உபயோக பதிவேடுகளை பரிசீலனை செய்து வித்தியாசத்தை தீர்க்க நடவக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 இலக்க சட்டங்களினால் திருத்திய 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(ஆ) பிரிவு. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 20 கைத்தொழில்களிற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாததால் ரூபா 80,000 ஆன வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது | உரிய நடைமுறைகளிற்கு அமைய சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வெண்டும். | எதிர்வரும் சுற்றாடல் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,865,210 ஆனதுடன், அதற்கு நேர் ஒத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 7,753,004 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,645,700 | 3,780,745 | 4,233,672 | 3,236,035 | 3,230,700 | 3,289,025 | 4,051,498 | 3,705,905 |
| (ii) | வாடகை | 13,750,500 | 10,320,777 | 8,377,306 | 3,714,184 | 5,955,650 | 6,083,257 | 5,645,519 | 1,929,353 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,164,200 | 1,158,625 | 1,185,125 | - | 800,000 | 819,410 | 819,410 | 96,518 |
| (iv) | ஏனைய வருமானம் | 68,660,000 | 163,639,561 | 133,294,851 | 91,822,717 | 55,743,600. | 59,322,822 | 55,912,973 | 37,376,957 |

### 2.2..2 வீதவரி மற்றும் வரி

**(அ) வீதவரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,147,818 ஆன நிலுவை வீதவரியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவி வரும் கூட்டுத் தொகை ரூபா 454,914 உம், 03 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவி வரும் கூட்டுத் தொகை ரூபா 194,709 உம் காணப்பட்டன. நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 பிரிவு பிரகாரம் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டம் பிரகாரம் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானத்துடன் இணங்குவதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) ஏக்கர் வரி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 2,087,290 ஆனதுடன் அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவி வரும் கூட்டுத் தொகை ரூபா 1,709,733 ஆன மீதியொன்று உள்ளடங்கியிருந்தது. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானத்துடன் இணங்குவதாக அறிவிக்கிறேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) கடையறை வாடகை** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை கடை வாடகை மீதி ரூபா 4,902,914 ஆனதுடன், அவற்றில் 03 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 2,045,733 உம், ஓராண்டை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 1,129,683 ஆன மீதியும் உள்ளடங்கியிருந்தன. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்வில்லை. |

(ஆ) குத்தகை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தல்தூவ வாராந்த சந்தையை குத்தகை வழங்கியிருந்த டென்டர்தாரரினால் உரிய முறையில் வாடகை செலுத்தாததால் 2019 நவம்பர் மாதம் டென்டர் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் அதன் போது நிலுவையாக காணப்பட்ட குத்தகை வாடகை ரூபா 333,750 ஆனது. அவற்றில் ரூபா 137,500 இனை பிணை காப்பினால் பதிலீடு செய்திருந்த போதும் மேலும் அறவிட வேண்டிய ரூபா 196,250 இனை அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குத்தகை பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | டென்டர்தாரரினால் வைப்புச் செய்த பிணை காப்புப் பணத்தை குறைத்துக் கொண்டதன் பின்னர் மேலும் அறவிட வேண்டிய ரூபா 196,250 இனை அறவிட சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கிறேன். |

2.2.4 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 15,775,252 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 29,806,129 ஆனது. அவற்றுள் 05 ஆண்டுகளை விஞ்சிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,120,242 உம் 03 ஆண்டுகளை விஞ்சிய முத்திரைக் கட்டணம் ரூபா 15,587,449 உம் உள்ளடங்கியிருந்தன. | குறித்த பணத்தை சபைக்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 15,775,252 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை இடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார எல்லையில் விளம்பர அறிவித்தல் பலகை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பாக தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த உப விதி வரைவின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் வியாபார நிலையமொன்றில் கட்டணம் செலுத்தாது காட்சிப்படுத்த முடியுமான ஒரு | கட்டணம் செலுத்தாது காட்சிப்படுத்த முடியுமான ஒரு விளம்பர பலகையின் உச்ச வர்க்க அளவு எவ்வளவு என | குறித்த உப விதி வரைவு ஆளுநரின் அங்கீகாரத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளதா கவும் அதன் 20 ஆம் பிரிவை மீண்டும் மகா சபைக்கு முன்வைத்து திருத்தி சரி செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | விளம்பர பலகையின் உச்ச வர்க்க அளவு எவ்வளவு என திட்டவட்டமாக தீர்மானித்திருக்கவில்லை. | திட்டவட்டமாக தீர்மானிக்க வேண்டும். | நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2010/2011 ஆண்டுகளில் சேகரித்த பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 2,163,505 இனை 2019 திசெம்பர் 31 திகதி வரையும் தேசிய இறைவரி ஆணையாளரிற்கு அனுப்பாது செலுத்த வேண்டிய காணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகதளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கணக்கின் மீதியை கூடிய விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தெஹிஓவிட்ட பொது வியாபார கட்டிடத் தொகுதி கீழ் மாடி பொது மலசல கூடம் 2019 ஆண்டு குத்தகைக்கு வழங்கியது தொடர்பான உடன்படிக்கையின் 08 ஆம் நிபந்தனையின் பிரகாரம் மாதாந்த நீர் பட்டியல் குத்தகைக்காரரினால் செலுத்தப்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டில் 03 சந்தர்ப்பங்களில் நீர் கட்டண கூட்டுத் தொகை ரூபா 35,136 தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் 08 ஆம் நிபந்தனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடன்படிக்கை பிரகாரம் டென்டர்காரர்களினால் நீர் பட்டியல் செலுத்தப்பட வேண்டிய போதும் நீர் பட்டியலை செலுத்த போதிய வருமானம் கிடைப்பதில்லை என அறிவித்துள்ளதால் நிதிக் குழுவின் அங்கீகாரத்தின் மீது சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்ததாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆண்டுகளிற்காக வாராந்த சந்தை குத்தகை வழங்குதல் தொடர்பான உடன்படிக்கையின் 10 ஆம் நிபந்தனையின் பிரகாரம் நீர் கட்டணம் குத்தகைக்காரரினால் செலுத்தப்பட வேண்டிய போதும் நீர் கட்டணம் செலுத்தாததன் மீது நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் நீர் விநியோகத்தை பெற்றுக் கொள்ளும் கட்டணம் மற்றும் நிலுவை நீர் கட்டணமாக ரூபா 107,614 தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. அத் தொகையிலிருந்து குத்தகைக்காரரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 77,614 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 மற்றும் 2018 ஆண்டுகளிற்காக தல்தூவ வாராந்த சந்தை டென்டர்காரரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 77,614 தொகையினை அறவிட சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்தாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தல்தூவ வாராந்த சந்தையிலிருந்து ரூபா 19,250 ஆன மாதாந்த குப்பை வரியை அறவிடாதிருக்க சபை தீர்மானித்துள்ள போதும் அது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 182 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதேச சபை சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாராந்த சந்தை குத்தகைக்காரரினால் மாதாந்த வாடகை பணம், நீர் மற்றும் மின் கட்டணத்துடன் குப்பை வரியை செலுத்த போதிய வருமானம் கிடைப்பதில்லை என விடுத்த கோரிக்கையின் பிரகாரம் சபையினால் குப்பை வரியை அறவிடாதிருக்க தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**தீர்க்கப்படாத அவதானங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஆண்டு முதல் நிலவி வரும் தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 4,553 இனை தீர்க்க நடவடிக்கை எடுத்தருக்கவில்லை. | தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம 2020 ஜுலை மாத மகா சபைக்கு முன்வைத்து தீர்க்கப்படவுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | பிரதேச சபை அமைந்துள்ள பல நோக்கு கட்டிட தொகுதியின் முதலாம் மாடியில் வங்கிக்காக வாடகைக்கு வழங்க உத்தேசிக்கப்பட்ட 319.5 வர்க்க அடிகளுடன் கூடிய 03 வளவிற்காக மலசல கூட வசதி வழங்கப்படாததால் வங்கிக்காக அவ்வளவுகளை வாடகைக்கு வழங்க முடியாதிருந்தன. அதன் பிரகாரம் ஒன்று திரட்ட எதிர்பார்த்த ரூபா 12,000,000 ஆன ஒரே தடவையில் செலுத்தும் பணம் மற்றும் ஆண்டிற்கு ரூபா 366,000 வீதம் கிடைக்க வேண்டிய மாதாந்த வாடகை இழக்கப்பட்டிருந்தது. | மலசல கூட வசதிகளை வழங்கி வருமானம் உழைக்க அல்லது வேறு பயனுள்ள செயற்பாடொன்றிற்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | தெஹிஓவிட்ட புதிய வியாபார கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் 03 வங்கி வளாகங்களிற்காக ஒதுக்கப்பட்டுள்ள மூன்று வளாகங்களில் ஒன்றில் தெஹிஓவிட்ட பொது நூலகம் அமைக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் ஒரு வளாகத்தையும் அதற்காக பயன்படுத்தி பொது நூலகத்தை விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மற்றைய வளவை சுதந்திர ஆயுள்வேத மருந்தகமொன்றை அமைக்க திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2019 திசெம்பர் 31 திகதியன்று இறைச்சி மற்றும் மீன் கடைகளிலிருந்து அறவிட வேண்டிய பழைய நிலுவை கடையறை வாடகை ரூபா 125,276 தொகை மற்றும் | நிலுவை கடையறை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இறைச்சி மற்றும் மீன் கடைகள் தொடர்பாக பழைய நிலுவையை அறவிட குறித்த டென்டர்காரர்களின் விபரங்களை பெற்றுக் கொள்ள பிரதேச செயலகத்திற்கு அனுப்பிய |

| | | | |
|---|---|---|---|
| | தண்டப்பணம் ரூபா 23,787 ஆனதுடன் அவற்றிலிருந்து 93,980 தொகை 1991 முதல் 1997 வரையான காலத்திற்கு அறவிட வேண்டிய பழைய கடையறை வாடகை மற்றும் தண்டப்பணமாகும். | | கடிதங்களிற்கு இது வரை பதில் கிடைக்கவில்லை என அறிவிக்கிறேன். |
| (ஈ) | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருக்காததால் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகள் ஊடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2019 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட கால திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகள் ஊடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2020 ஆண்டு முதல் 2025 ஆண்டுகளிற்காக தயாரிக்கப்பட்டுள்ளதாகக அறிவிக்கிறேன். |
| (உ) | வருடாந்த சொத்துக்கள் கணிப்பீட்டின் போது அனுமதியற்ற நிர்மானம், குடியேற்றம் போன்றவற்றை இனங்கண்டிருந்த போதும், அவற்றை அகற்ற/தடுக்க, எல்லைகளை அமைத்து பாதுகாக்க மற்றும் சபைக்கு வருமானம் ஈட்டிக்கொள்ள பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானம் ஈட்டிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுமதியற்ற சுறங்க அகழ்வுகள் தொடர்பாக அவிஸ்சாவேல்ல பொலிஸ்சிற்கு முறைப்பாடு செய்ததுடன் அதன் பின்னர் சுறங்க அகழ்வுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |